**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 26–ம் நாள்
2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11–ம் நாள் திங்கட்கிழமை
*******

**அசல் வழக்கு எண். 74/2016**
**CNR.No.TNMY07-000083-2016**

சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, கொள்ளிடம் தோப்புத் தெருவில் வசிக்கும் முருகேசன் குமாரர் 60 வயதுள்ள M.சுந்தர்ராஜன் (எ) M.S.ராஜன். ...வாதி

**....எதிர்....**

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, துளசேந்திரபுரம் கிராமம், மெயின் ரோட்டில் வசிக்கும் முருகேசன் குமாரர் சுமார் 65 வயதுள்ள M.தேவதாஸ் (இறந்தார்).
2. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, துளசேந்திரபுரம் கிராமம், மெயின் ரோட்டில் வசிக்கும் சின்னபிள்ளை மனைவி சுமார் 58 வயதுள்ள C. தேவிகா.
3. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, துளசேந்திரபுரம் கிராமம், மெயின் ரோட்டில் வசிக்கும் ராஜேந்திரன் மனைவி சுமார் 56 வயதுள்ள R. கலைச்செல்வி.
4. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, துளசேந்திரபுரம் கிராமம், மெயின் ரோட்டில் வசிக்கும் ராஜேந்திரன் குமாரர் சுமார் 30 வயதுள்ள R.மனோரஞ்சித்.
5. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, துளசேந்திரபுரம், மெயின் ரோட்டில் வசிக்கும் மனோரஞ்சித் மனைவி 36 வயதுள்ள ரோகிணி.
6. சிதம்பரம் டி.மு.லாகா, சிதம்பரம் டவுன், 3/30, இளமையாக்கினார்கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் தேவதாஸ் மனைவி 56 வயதுள்ள இந்திரா.
....பிரதிவாதிகள்

வழக்குச் சொத்தில் வாதிக்கு சட்டப்படி கிடைக்க கூடிய 1/4 பாக வீதம் தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டின் அடிமனையையும், தாவா சொத்தில் உள்ள வீட்டையும் நள இளப்பம் சரி கட்டி பிரித்து கிடைக்க ஒரு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடக் கோரியும், மேற்படி முதல் நிலை தீர்ப்பாணைபடி பாகம் பிரித்துக் கிடைக்காத நிலையில் வாதி ஆணையர் நியமனம் செய்து 1/4 பாகம் பிரித்து கிடைக்க இறுதி நிலை தீர்ப்பாணைக்கு மனு செய்து கொள்ள வாதிக்கு அனுமதி அளித்து உத்தரவிடக் கோரியும், வழக்குச் சொத்தை வாதியும், முதல் பிரதிவாதியுடன் சேர்ந்து பாகம் பிரியும் வரை கூட்டாக கூட்டு உரிமையாளராக அனுபவிப்பதை 1, 4 பிரதிவாதிகளோ, அவர்களது மனுஷாளோ அல்லது ஏஜண்டோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க 1, 4 பிரதிவாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் வாதிக்கு அளித்து உத்தரவிடக் கோரியும், செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 06/04/2016 அன்று தாக்கல் செய்யப்பட்டு 06/04/2016 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் வழக்கு மூலமானது வாதி வழக்குச் சொத்தில் பாகம் பிரித்துக் கேட்ட தேதியான 27.03.2016 முதலும், வழக்குச் சொத்தை வாதி அனுபவிப்பதை இடையூறு செய்ய 1,4 எதிர்வாதிகள் முற்பட்ட 27.03.2016 தேதி முதலும் சீர்காழி தாலுக்கா, துளசேந்திரபுரம் கிராமத்தில் உற்பத்தி.

இவ்வழக்கிற்கான நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற கட்டணத்திற்காகவும் பொறுமானம் ரூ.98,500/- என நிர்ணயித்து அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.175-50-ம் நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவுகள் 37(2) மற்றும் 27(சி)-ன் கீழ் இத்துடன் செலுத்தப்பட்டுள்ளது.

<u>**பொருமான விபரம்**</u>

| | |
|---|---|
| அ) வழக்குச் சொத்தில் வாதிக்கு கிடைக்க கூடிய /4 பாக வீதம் நள இளப்பம் சரிகட்டி பிரித்து கிடைக்க வாதி பொறுமானம் அடி மனை 0.13 -1/3 செண்ட்டுக்கு சமமான 40 குழிக்கு குழி 1-க்கு 1,000/- வீதம் | ரூ. 40,000-00 |
| அதில் உள்ள வீடு மதிப்பு | ரூ. 3,50,000-00 |
| **கூடுதல்** | **ரூ. 3,90,000-00** |
| அதில் வாதியின் 1/4 பாக மதிப்பு (அதற்கு நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.100/-ம் நீதிமன்ற கட்டண சட்டப் பிரிவு 37(2)-ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது). | **ரூ.97,500-00** |

ஆ) வழக்குச் சொத்தை வாதியும் முதல்
எதிர்வாதியுடன் சேர்த்து அனுபவிப்பதை
1, 4 எதிர்வாதிகள் இடையூறு
செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக்
கட்டளை பரிகாரம் பெற வாதி பொறுமானம் **ரூ.1000–00**

(அதற்கு நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்ற
கட்டணம் ரூ.75–50/–ம் நீதிமன்ற
கட்டண சட்டப் பிரிவு 27(சி)–ன் கீழ்
செலுத்தப்பட்டுள்ளது).

------------------------------

**கூடுதல் மொத்த பொறுமானம் ரூ.98,500–00**
**கூடுதல் மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.175.50**

------------------------------

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 07.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 1–ம் பிரதிவாதி இறந்த நிலையில், 2, 3 மற்றும் 5–ம் பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்ட நிலையில், 2, 3 மற்றும் 5–ம் பிரதிவாதிகளை 15.02.2024 அன்று இந்நீதிமன்றத்தில் அழைத்து அஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 4–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி V. சாந்தி அவர்கள் ஆஜராகியிருந்தும், வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் 4–ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 6–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் G.வசந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 6–ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.
2. தாவா சொத்தில் வாதி, 2 மற்றும் 3–ம் பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு தலா 1/4 பாக வீதமும், 5 மற்றும் 6–ம் பிரதிவாதிகள் இருவருக்கும் 1/4 பாக வீதம் கூட்டாக சேர்ந்து கிடைக்கக்கூடியது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. இவ்வழக்கின் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
4. தரப்பினர்களின் உறவுமுறையைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
5. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விவரம்**

மயிலாடுதுறை ஆவண பதிவு மாவட்டம், கொள்ளிடம் சார் பதிவுகம் சீர்காழி தாலுக்கா, துளசேந்திரபுரம் கிராமத்தில்,

புல எண்.367/20–ல் நஞ்சை (தற்போது மனை)– 0.13–1/3 செண்ட்டுக்கு சமமான 0.40 குழியும் அதிலுள்ள வீடு உள்பட (பூரா).

**நான்கெல்லை :**

அருணாசல அங்குராயர் நஞ்சைக்கு மேற்கு, மங்களத்தம்மாள் நஞ்சைக்கு கிழக்கு, P.E.முகம்மது இஸ்மாயில் நஞ்சைக்கு தெற்கு, கோவிந்தராஜீ வீடு, கொல்லைக்கு வடக்கு இதற்குட்பட்டது. (20.12.1985–ந் தேதிய பத்திரப்படி).

**வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகைப் பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.**

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11–ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஓம்/– மா.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**தீர்ப்பாணை**

அசல் வழக்கு எண்.74/2016
நாள். 11.08.2025.